58

ACL-TNAL
00064

திருப்பொன்னூசல் திருச்சாழல்
திருவெம்பாவை திருவம்மானை

C

Q23:417
N25
178949

15

உ

திருச்சிற்றம்பலவன் திருவடிகளே சரணம்.

முருகநகர் சிற்றம்பலநாதர் என்னும்

சிதம்பரயீஸ்வரர் திருவாதிரைத்

திருவபிஷேகத் திருவுலாக்

கொம்மி.

இஃது

நங்கையம்பதி K. துரைஸாமிஐயரின் குமாரரும்
முருகூர் சரஸ்வதி வித்யா தர்ம எலிமெண்டரி
பாடசாலையின் முதல் உதவி உபாத்தியாயருமான

D. கல்யாணராம அய்யரால்

இயற்றப்பட்டது.

திருச்சிறுப்பள்ளி ஜில்லா துறசமா நகர் வாழ் திருத்தகு
மாணிக்க உபாத்தியாயர் குமாரரும், ஷியூர் ஜெமீன்தார்
ஸ்கூல் உதவி உபாத்தியாயருமான திருவாளர்

T. M. பாலசுந்தரமய்யர் அவர்களால்

பரிசோதனை செய்யப்பட்டு

முருக நகர் ஸ்ரீமான் ரு. மா. ருமசாமி பிள்ளையவர்களின்
பொருளுதவியால்

திருச்சிறுப்பள்ளி
... இந்தியா பிரஸில்
... பிக்கப்பட்டது

1925

THE ... OFFICE ... 27 AUG 19.. MADRAS

Q23:.4ரு
N25
128949

முருகநகர் 19-வயதுள்ள

R. துரைசாமி என்னும் பாலன்

செல்வ விநாயகர் பேரில் பாடிய

கீர்த்தனை.

சர்வ சங்கடமே—என்ற மெட்டு.

பல்லவி

ஜெய கணபதியே—நின்றன்
தீர வீர சூரனை—(ஜெய)

அநுபல்லவி

தாயைப்போலப் பெண் வேணுமென்றீரே
தண்ணிக்கரையில் சாய்ந்து நின்றீரே
மாயமாக வல்லபையை
மணந்து சினந்து அணைந்து நின்ற (ஜெய)

தம்பி சுப்பிரமண்யன் நினைக்க
தாமதம் செய்யாமலோடி
சென்று அந்த வள்ளியை வென்ற
திருவருள்புரி மத கெஜமுக (ஜெய)

நேமனும் முருகூரில் வாழும்
பூமனும் சிறுபாலன் துரை
சாமிசொன்ன வாக்கு தன்னை
பொருத்து என்னை ஆட்கொள்வீரே (ஜெய)

உ

ஓம்

சிற்றம்பலநாதர் கொம்மி.

கணபதி துதி

பேருலவு மாமுருகூர்ப் பெம்மான் சிற்றம்பலவன்
பாருலவு கொம்மிதமிழ்ப் பாடுதற்கு—கூருலவு
கொம்புலவு கோலப் பெருவயிற்றோன் கோகனக
வம்புலவு தாளே வழி.

கொம்மி

கொம்மியடிப் பெண்கள் கொம்மியடி—நீங்கள்
குனிந்து கொம்மி யடியுங்கடி
நம்மையாளும்முரு கூர்சிற்றம் பலத்தினை
நாடிக்கொம்மி பாடிக்கொட்டிடவே 1

மூஷிகந் தானேறும் மோதகந் தானுண்ணும்
முக்கண்ணன் பெற்றிடும் விக்கினனை
மும்மல நீங்கிடச் செம்மை மனத்துடன்
முடிவணங்கிக் கொம்மி கொட்டுவமே 2

மண்டலந் தன்னில் உலாவுகின்ற நல்ல
வண்டார் குழலிகாள் சேருங்கடி
அண்டங் காக்கும்நீல கண்டர்உலாக் கும்மி
அன்புடனே பண்பாய்ச் செப்புதற்கு 3

சூரர் கிளைகளை வேரறுத்தே சுரர்
துன்பந் துடைத்தருள் சண்முகனைப்
பேர் தவழ் சீர்முரு கைப்பதி யீசனை
பேசிக்கை கொட்டலாம் வாருங்கடி 4

தண்ணாருஞ் சோலைகள் நண்ணும் முருகையின்
தாணுவின்மேற்கொம்மி பாட்டுரைக்க
மண்ணவர் போற்றிடு மிராமசா மிப்பெயர்
நண்ணிடு மண்ணால் மனமுவந்து 5

ஆலய மும்மணி கோலஞ்சேர் மண்டபம்
ஆயிரக் கணக்காய்ச் செலவழித்து
சீலமுடன் பணி தொண்டரைவைகுந்தஞ்
சேர்த்திடுஞ் செல்வஞ்சேர் மூர்த்தியதாய் 6

கட்டிப்ர திட்டையை இட்டமுடன் செய்த
முன்னியர் சிதேவி பூதேவி
ஒட்டிய காட்சி கொடுத்தருளும் நல்ல
சிட்டன் வரத ராஜன் துணையே 7

செந்நெல் விளைந்திடு நன்னில மும்மிரு
தித்திக்குங் கன்னலத் திக்கிலுஞ்சேர்
பன்னவ மும்பெறு சொன்ன புரி யெனப்
பன்னுமின் சீர்முருகைப் பதியை 8

கன்னலின் நற்சாறு பொன்னியெனவோடி
கதிர்வளர் சாரிபாய் கழனிகளும்
கன்னியர் நன்னய மாகநீர் திரட்டிடும்
கற்கட்டுத் தெப்பக் குளத்தழகும் 9

காத்திடு முத்தையன் கன்னி மகமாயி
கன்னிமா ரேழ்வர் பிடாரியம்மன்
காலமுழுவதுஞ் சூலங்கைக் கொண்டுறும்
கனத்த ஆலயம் பாருங்கடி 10

தங்க மயமான மாடங்கள் மேகங்கள்
தங்கும் மாளிகைகள் கோவில்களும்
எங்கும் இலையிதற் கொப்பெனவேசெப்பி
யேந்திக் கை கொட்டியே பாடுங்கடி 11

பாலர்கள் வேளைதப் பாமல்சென் றோதிடும்
பாலை நிலையத்தின் நன் பெருமை
கோல மணிந்திடும் வாலிபப் பெண்களே
கூறமொண்ணதெனக் கொட்டுங்கடி 12

கோட்டை வீதிநாலும் மேட்டிமை யாமடி
கூறமுடியா தகலமடி
நாட்டிலுள் ளோர்வந்து கூட்டமாய் கூடிடும்
நல்ல கடைசெறி வீதியடி 13

பத்தர்கள் நித்தமும் நத்திப் பணிந்திடும்
பாமன்றலையம் பாருங்கடி
இத்தரையி லிந்தக் கோயில்போல் நீங்களும்
எங்கும் கண்டீர்களோ கூறுங்கடி 14

கேட்ட வரந்தரும் நாட்டமோர் மூன்றுடை
கேடிலி யப்பனைப் பாருங்கடி
வாட்ட மகற்றிடுந் தோட்டஞ்சூழ் நந்தன
வனமுஞ் செறிவதைப் பாருங்கடி 15

கன்னன் நிகர்த்திடுஞ் சொன்னம் படைத்திட்ட
மன்னன் மாரியப்பபிள்ளையுமே
விண்ணும் மகிழ்ந்திட்டு நண்ணும்படிச் செய்த
வித்தகர் கோயில் கல் வெட்டைக் காண்பாய் 16

சைவ சமயமே மெய்ச்சமய மென்றும்
சற்சம யத்தினி லீடுபட்ட
பொய்யகல் சிதம்பர உடையார் முயர்ச்சியால்
பொருந்திடு நற்கோவில் நாடுங்கடி 17

நம்பெரு மான்றன் செம்மையினைக்காண
  நாயகி என்னுடன் வருவாயே
நம்பிடும் பத்தர்கள் வெந்துயர் தீர்த்திடும்
  நாயகத் தன்மைக் கண்ணுறுவாயே 18

தெய்வ மடந்தையர் பொய்யகல் புண்ணியர்
  சிற்றம்ப லேசனைக் கைதொழுது
மெய்வசி காமணி விற்றவனை யென்று
  மேன்மையாய்ப் பாடுவார் முப்பொழுதும் 19

ஆதி சிவன்முன்பு சோதி யெரிவதும்
  அழகான தீவட்டி யின்னிரையும்
ஓதியே அன்பர்கை கூப்பித் தொழுதிட
  ஓங்கும் பூசைநாலு காலமுமே 20

ஆலய திட்டத்தை யோலையில் எழுதிட
  அன்னமே நம்மாலு மாகாதடி
மாலயன்றேடிடும் நீலகண் டன்றனை
  மங்கையே செங்கையால் போற்றிடடி 21

வாரங்கள் தவறாமல் சேரும் விழாக்களும்
  வகையாய்ப் பட்சங்களின் உற்சவமும்
நேரான மாதத்தின் சாருமுற் சவங்களும்
  நெறியாய் நடப்பதைச் செப்புவமே 22

மாதம் இரண்டென வோதும் பிரதோஷமும்
  மாறாச் சிவபத்தி யிற்சிறந்தார்
கோதையே நல்ல சிதம்பர உடையார்
  கூடியே நடத்தத் தான்புகுந்தார் 23

திங்கள் தோறும் வரும் மங்களக் கார்த்திகைச்
  சேருந் தினத்தினில் மூர்த்திகட்கும்
சங்கம் முதலான மங்கா வபிடேகம்
  தையலே காணவே காத்திருப்போம் 24

தைத்திரு திங்களில் நத்திடும் பூசத்தில்
தையலே சோமஸ் கந்தமூர்த்தி
வைத்த காமதேனு வாகனத்தின்மீது
வகையாய் வருங்காட்சி வெகுநேர்த்தி 25

தன்னைத் துதித்திடும் நன்மையைப் பத்தர்க்குத்
தணையின்றி துத்திதனைக்கொடுக்க
துன்னும் கோட்டைவீதி மன்னியுலாவரும்
தோகையே நாமங்குகாத்திருக்க 26

மாசிமகந்தனில் வாசக்குழலாளும்
வாமம பொருந்திட விடையிவர்ந்து
தேசுடன் தானுமா ஈசன் வருவதை
தேவியே காணுவம் காத்திருந்து 27

மாசிமா தந்தன்னில் மாசிவராத்திரி
மங்கையரே அபிஷேகமதாம்
வாசவன் புகழ் இராமசாமி பிள்ளை
வள்ளன்மைசெப்பத் தகுந்ததுவாம் 28

கணக்கற்ற காசை மனக்கினிதரநீட்டிக்
கனிகள் பலவர்க்கம் வாங்குவதும்
இணக்கமதாக் கங்கை தனக்குத் தலைதந்த
ஈசர்க்கபிடேகம் நடத்துவதும் 29

பங்குனி உத்திரந் தங்குது நாள்கந்தன்
பாவைவள்ளி தெய்வயானையோடும்
தங்க மயில் மீதிற் பொங்கும் பவனியை
சங்கையறக்காணக் கூடிடுவோம் 30

சித்திரை பௌர்ணமி நத்துந் தினத்தன்று
சீரான சோமஸ்கந்தமூர்த்தி
வித்தகமாகவே தத்திப் பவனியாய
வெள்ளிவிடைவரும் வெகுநேர்த்தி 31

ஆரணம் போற்றிடும் சீரான முருகையின்
ஐயன் சிற்றம்பல மெய்யனடி
நாரணன் நான்முகன் தேறியுணராத
நாதனென்றேன் நீங்களோதுங்கடி 32

வைகாசித் திங்கள் விசாக தினத்தன்று
வகையாய் நடக்கும் பெருமைகளே
ஆகாசத்தினிலாடும் பரமற்கிங்
கார்நிக ரென்று நீர்செப்புங்களே 33

ஆனியா மாதத்திற் பேணும் மஞ்சனங்கள்
அன்னமே தவறுமலே நடக்கும்
வானும் வந்துமே தானும்வந்தெந்நாளும்
வலைகடல்போலவே அங்கிருக்கும் 34

நாடியே மாதமாம் ஆடிப்பூரோற்சவம்
நங்கையே கண்டா லண்டா வினையே
தேடியே காக்ஷியைக் கூடியே காணவே
தேமொழியே யழைப்பே னுன்னையே 35

ஆவணிமூலத்தில் கோவணிகர் செய்யும்
அற்புதப் பிட்டு மகோற்சவமாம்
பாவணி மாலைகள் தேவணிந் தெந்நாளும்
பாங்காய் நடைபெறுஞ் சதுர்த்தியுமாம் 36

ஊன மகற்றிடு மான புரட்டாசி
ஒன்பது நாளும் சிவகாமி
தேனமர் கொன்றை யானை யமர்ந்துமே
தினங்கொலு கொள்ளுவா ளபிராமி 37

நாளுக் கொவ்வொரு நாளலங்காரமாம்
நங்கையே செங்கையால் நம்பிசெய்வார்
நாளும் பெருங்குளம் நாடும் பொனுசாமி
நல்ல மனத்துடன் நடத்துகிறார் 38

ஐப்பசித் திங்களில் செப்பத் தகாததாம்
அன்னாபிடேகப் பெருமையதை
செப்பினாலாகிய கொப்பரை கொண்டுமே
செந்நெல் அன்னம் மலை யொப்பாக 39

கற்றவர் போற்றிடுஞ் சிற்றம்பலவன்மேல்
கட்டடனே கொட்டிச் சேர்ப்பாரே
சிற்றம்பலம் மறைத்துற்றவர் காட்டவே
சிதம்பர நாதனைப் பார்ப்பாரே 40

ஐப்பசி மாதத்தில் செப்பும் பிரதமை
யாறான சஷ்டி திதி வரைக்கும்
திப்பியமாகவே ஒப்பிலா மயிலேறும்
தேவன் சுப்பிர மணியனுக்கும் 41

ஆனாரூனாவெனும் மன்னன் இராமசாமி
அன்பன் நடத்திடுஞ் சொந்தமடி
தேனாபிஷேக மானச் சிறப்புடன்
செய்வதுமே வெகு விந்தையடி. 42

ஆறான சஷ்டியில் ஆறுமுகத்தனை
யம்மைவள்ளி தெய்வயானையுடன்
பேரான சூரனை மாறாகக் கொய்யவே
பெரிய தங்கத்தின் மயிலுடனும் 43

ஆடம்பரத்துடன் ஆடுங் கொடியுடன்
அந்தமான வீதியில் வருவார்
நாடும் பத்தர்கள் கூடும்படி யருள்
நல்கியே கோவிலுள் புக்கிருப்பார் 44

கார்த்திகை மாதத்தின் கார்த்திகை நாளினில்
கண்ணிய வான் ராமசாமி பிள்ளை
நேத்திய தாகவேயேத்தி லட்ச தீபம்
திருத்துங் காட்சிதனக் கொப்பில்லை 45

ஆராதனைகளும் நேராயபிஷேகம்
 ருவன்று மாவன்று ராமசாமி
சீராக வேங்கடத்தும் பெருமைகளைச்
 செப்புந் தரமல்ல வேசாமி 46

கார்த்திகை தீபத்தை யேத்தினனே நல்ல
 கண்ணிய வாண் ராம சாமிப்பெண்ணே
ஆர்த்தி யடங்கா நேத்தியான பத்திக்
 காழியை யொப்பாகச்சொல்வோம் கண்ணே 47

மார்கழி மாதத்தில் ஏர்மிருக சீரஷம்
 மன்னு நாள் சின்னச் சாமியுடையார்
சீருறு கொங்கைமேல் தாருறு சிவகாமி
 செல்வ மணத்தற்குத் தானுடையார் 48

பெருகிய மார்கழித் திருவாதிரையன்று
 பேர் பெறு நல்லபிஷேகமதை
திருவார் செல்வங்கள் ஒருவாத மூவர்கள்
 சேர்ந்தொன்றாய்ச் செயதிடும் மேன்மையதை 49

கருணையே தான் கொண்ட அருணாசல மெனும்
 கந்தனுடனே சதாசிவனும்
பெருமையே கொண்ட அருமை பொன்னம்பலம்
 புண்ணிய வாளரும் மூவருமே 50

ஆராதனைக் கேற்ற சீரான சாமான்கள்
 அடைவுடன் சேர்க்கும் விபரமதை
நேராகச் சொல்லவே பாரோர் புகழவே
 நேரிழை கொட்டு நீ கொம்மியதை 51

நற்றவஞ் செய்துமே போற்றி மனத்துடன்
 நாதர்க் கபிடேகப் பொருள் களையும்
சுற்றிக் கொணர்ந்துமே பற்றுடனே கொட்டச்
 சொல்லுவதை நினை வினைகளையும் 52

காரத்த மோடுநற் பூரித்த கொளுஞ்சி
நல்ல பழமாகு மெலுமிச்சை
சேரத் தொகுத்திடும் ஆரஞ்சு போய்பலம்
சேரிளநீர்க்குலை ம்குவிச்சை 53

வாங்கக் களைந்திடும் ஓங்குநல்மாதுளை
வாகான மஞ்சள் பலாக்கனியும்
தீங்கரும்பின்சாறும் பாங்கான வாழையும்
செந்திருவே எண்ண மனங்கனியும் 54

வம்பு செறிந்திடும் கொம்புத்தேனும நல்ல
மணமு மமைந்தநற் பன்னீரும்
அம்பரமான திகம்பரனுருக்
கணிந்திடும் பொன்போற் றிருநீறும் 55

தென்றல் பொதிகையின் மன்றல் நிறைந்திடும்
திப்பியமானபொற் சந்தனமும்
நன்றெனச் சொற்றிடும் நன்புழுகோடுமே
நல்ல சர்க்கரை சேரன்னமுடன் 56

அத்தர் நிறைந்திடும் வத்திகளும் நல்ல
ஆகாயம் வீசும் நறுமணமும்
கொத்து மலர்நிறை கத்திகையும் அங்கு
கொங்கு நிறைந்திடு சம்பகமும் 57

மல்லிகையும் நல்ல முல்லை மலருடன்
மந்தாரை பாதிரி செங்குவளை
சொல்லமுடியாத அல்லியந்தாமரை
தொகுத்துக் குவித்துமே எங்கும் விளை 58

புன்னை மலரொடு தண்ணறுங் கோங்கமும்
பொங்குமலரியின் பூக்கொழுந்தும்
சொன்ன மருவொடு துன்னு நற்றாழையும்
தோகையே வண்டினந் தாமருந்தும் 59

எங்கு மிலாதமேதோர் கொங்கு செறிந்திடும்
எல்லா மலர்களும் சேர்த்திடுவார்
பங்கமிலா பத்தர் செங்கை குவித்துமே
பார்த்துப் பார்த்தங்கே நிறைந்திடுவார் 60

மதுரா புரியினுள் மாது மீனாட்சியின்
மணத்திற் கமைந்திடும்சீர்போலே
ஓது சிவகாமி நாதர்நற் சுந்தரர்
உள்ளம் மகிழ்ந்திடும் நற்கோலம் 61

பூக்கள் வருகின்ற வாக்கைஎன் னாவினால்
பூர்த்தியாய் கூற வொண்ணாதடியே
மாக்களுங் கூடியே நோக்கவொண்ணாதரும்
மகிமையைப் பன்ன வொண்ணாதடியே 62

எல்லாப் பொருள்களும் நல்ல மணத்துடன்
ஏத்தியே நம்பிக்குக் காத்திருக்க
வல்ல அறிஞர்கள் சொல்லும் பணத்துடன்
வகையாய்ப் பத்தி யுடனிருக்க 63

நாளும் தம்மையே ஆளும்நல் லீசனை
நல்ல பூசனைகள் செய்பவனே
வேளும் விரும்பிடும் காளையரம் சோமநற்
சுந்தரனும் பெயர் பெற்றவனே 64

நம்பிகள் செய்கின்ற வம்புகள் மோசங்கள்
நாட முடியாதிச் சோமனிடம்
தம்பிரானறன்னையே நம்பி பூசைசெய்யும்
சற்குணமே சாருமவனிடமே 65

நிறைந்த அபிடேகச் சிறந்த சாமான்களை
நின்று நடம்புரி யீசனுக்கு
அறையு மபிடேகம் குறையாது செய்கின்ற
அழகையென் சொல்லுவேன் நின்றனக்கு 66

பாலோடு நெய் தயிர் பன்னீர் இளநீரும்
பக்குவமான கனிரசமும்
கோலமாந் தேனுடன் சீலபஞ்சாமிர்தம்
கொங்கு நிறைந்திடும் முக்கனியும் 67

வரிசை தப்பாமலே கரிசனத் தோடுநல்
வழக்கா யபிடேகந் தானடத்தி
உரைசெய் நைவேத்தியம் நிரையாகவே செய்து
உயர்ந்தகள் பூரமும் தானடத்தி 68

வேண்டிய பட்டாடை ஈண்டிக் குவித்திட
வேணும் நற்பட்டையும் தாமெடுத்து
தாண்டவ மூர்த்திக்குக் காண்டகு கைவினை
சகலரும் கொண்டாடத் தாம் சாத்தி 69

சந்தனக்காப்பது தானுமிட்டு நல்ல
சவ்வாதை நெற்றியிற் பொட்டுமிட்டு
வந்திடு பக்தர்கள் தொந்தோமென்றுனந்த
வாகான கூத்துக்கள் ஆடவிட்டு

பலவிதமாகவே சொலமுடியாவகை
பற்பல மாலைகள் தாம்சூட்டி
கலைவளர் திங்களின் விலைவளர் மாணிக்க
கற்கள் பதித்த பணி பூட்டி 71

ஆனவுடன் நல்ல மான அலங்கார
மாகும் சர்ப்ப தீபந்தானுடனே
கானமர் கொன்றையன் வானவனுக் கங்கே
காட்டும் ரிஷபதி பத்துடனே 72A

பூதலந்தன்னிலே புண்ணிய முண்டாகும்
பூவையே புருஷ தீபமுமே
போற்றித் துதிசெய்யும் நம்பியார் கூட்டம்
பேரணிகாண நாம் செல்லுவமே B

ஒய்யாரமான மாயூர தீபமுடன்
ஒன்றும் கும்பதீபம் தான்காட்டி
செய்ய, மாவைந்து கையில் தட்டிதீபம்
செம்மையதாகவே முன் கூட்டி 73

குடையும் சுருட்டியும் மிடையும் நெடுங்கொடி
கொண்டு சிவிறியொண் சாமரமும்
அடைந்திடும் பத்தர்கள் தடையற நின்றுமே
ஆனந்தம்கொள்ளக் காட்டுவதும் 74

இங்கித மானநற் சங்கீத மேளங்கள்
இல்லாமல் சற்று தணித்திடவே
செங்கை மலர்கொண்டு அலகு நின்ற நம்பி
செவ்வையாய் அர்ச்சனை தந்திடவே 75

நத்திப்பணிந்திடும் பத்தர்கள் யாவர்க்கும்
நல்லகற் பூரத்தின் காட்சி தந்து
நித்தியமானசற் பாத்திரர் யாவர்க்கும்
நிர்மலமான நன்னீறுமீந்து 76

அன்னமே முன்செய்த பன்னும் வினைகளும்
அகலவே நாதன்றன் நீறளித்து
வன்னச்சந்தனமும் நன்னய மாலையும
வண்மையுடன் கையில் தானளித்து 77

நற்பரிவட்டமும் பொற்புடன் கட்டியே
நங்கை பங்கன்பிர சாதந்தந்து
கற்றவர் மற்றவர் உறவுவர் ஏனையர்
கைகாட்டி அக்கமணி யணிந்து 78

மங்கைசிவகாமி பங்கன் நடேசனை
மாணிக்க சப்பரந் தானேற்றி
பங்கமொன் றில்லாத மங்களமாகவே
பவனிகொணர்வதைப் பார்போற்றி 79

தீர்க்கமுடனுலா மார்க்கம் வருவதை
   தேமொழியே நானும் என்னசொல்வேன்
பார்க்கத் தகுந்திடும் பேர்பெற்ற வேணுவும்
   பங்காக நாதசுரத்தில் வெல்வான் 80

இத்தலத்திலுள்ள பத்தர்கள் கூடியே
   இன்பமான பஜனைகள் செய்துவர
முத்தர்கள் வந்துமே நித்தம் பணிந்திட
   மூர்த்தியும் தாம் விடையூர்ந்துவர 81

கோட்டைவீதி நான்கும் மேட்டிமையாய் சுற்றி
   கோதையரே ஈசன் வருவதைப்பார்
பாட்டைப் படித்துமே நாட்டிலுள்ளோரங்கே
   பணிந்துகை கொட்டும் விந்தையைப்பார் 82

உலாவும் முடியவே நிலாவின் ஒளிபோல
   உயர்ந்த கோபுரமுன் தட்டிசுற்ற
புலவரும்போற்றிட புலவனும் நடேசனும்
   பூஜையுடன் அந்த கோவிலில்சுற்ற 83

நாட்டிய மங்களம் காட்டிப்படித்திட
   நங்கையே வேணுமே எம்நிறுத்தும்
வாட்டிய துன்பங்கள் நாட்டிலிலாமலே
   வள்ளல் அருள்செய்யப் பவனிமுற்றும் 84

கல்யாண ராமனும் காலந்தவராமல்
   கைதொழு மீசன் அடிவாழி
சொல்லவொண்ணாத பத்தர்கள் வாழியே
   துய்யநீறணிகின்ற அன்பர் வாழி 85

வாழி வாழி வாழி வாழி யச்சேற்றினேன்
   வாழியநம்பியும் தான் வாழி
வாழிமுருகை நகரார் வாழியென்று
   வஞ்சியரே கொம்மி கொட்டுங்கடி. 86

128949

9A
5-228